DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, SATHYAMANGALAM

| CC.NO. 33/2017 | | Crime No.: | Station : |
|---|---|---|---|
| PW : 3 | LW : 3 | C.MP. | DVC : |

| Name | நௌசர்(வனவர்) | Caste | |
|---|---|---|---|
| Father's Name | பாபு | Calling | ஆனைமலை புலிகள் காப்பகம், பொள்ளாச்சி வனச்சரகம் |
| Village | சத்தியமங்கலம் | Religion | |
| Taluk | | Age | 49 |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 the day of | | | 11.12.2023. |

**(எதிரி ஆஜர்)**

**முதல் விசாரணை :-**

1. நான் தற்போது ஆனைமலை புலிகள் காப்பகம் பொள்ளாச்சி வனச்சரத்தில் தனிபணி வனவராக பணிபுரிந்து வருகிறேன். நான் சத்திமங்கலம் வனச்சரகம் எடை மேடை பிரிவு கொண்டப்பநாயக்கன்பாளையம் காவல் சுற்றில் வனக்காப்பாளராக 01.11.2013 தேதி பணிபுரிந்து வந்தபோது வனவர் ராஜேந்திரன் தலைமையில் வனக்காப்பளர் நாகராஜன், வேட்டை தடுப்பு காவலர் பாபு ஆகியோருடன் நானும் பிசில் மாரியம்மன் கோவில் சரகம் பகுதியில் காலை சுமார் 11.00 மணியளவில் ரோந்து சுற்றி வரும்போது இரு நபர்கள் ஒரு இரு சக்கரவானத்தில் நின்றுகொண்டிருந்தார்கள். சந்தேகம் படியாக காப்பு காட்டுகுள் நின்றுகொண்டிருந்தால் அவர்களை சோதனை செய்த போது வெள்ளை நிற சாக்குபையில் அலுங்கு என்கின்ற எறும்பு திண்ணியின் ஓடுகள் சுமார் 850 கிராம் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டு, அவர்களை விசாரித்தபோது அவர்களில் ஒருவர் பெயர் பெருமாள் , கானகுந்தூர் சேர்ந்தவர் என்றும் மற்றொருவர் பெயர் ரங்கசாமி , சிக்கரசன்பாளையம் சேர்ந்தவர் என்றும் தெரிவித்தார்கள். எதிரி ரங்கசாமி கேட்டுக்கொண்டதற்கு இணங்க எதிரி பெருமாள் நகலூர் காப்பு காட்டுக்குள் சென்று எறும்பு தின்னியை வேட்டையாடி அதன் ஓடுகளை எடுத்துவந்ததாகவும், எதிரி ரங்கசாமி தனக்கு சொந்தமான Star city TN 39 AL 2806 என்ற இருசக்கர வாகனத்தை எடுத்துக்கொண்டு வந்து விசில் மாரியம்மன் கோவில் அருகில் பெருமாளுக்காக

காத்துகொண்டிருந்தாகவும், பெருமாள் வெள்ளை நிற சாக்கு பையில் கொண்டுவந்த எறும்பு திண்ணியின் ஓட்டை சத்தியமங்கத்தில் விற்பனை செய்யலாம் என்று நோக்கத்தில் எடுத்துவந்தபோது தான் எங்களிடம் மாட்டிக்கொண்டதாக எதிரிகள் இருவரும் என் முன்னிலையிலும் சாட்சி வேட்டை தடுப்பு காவலர் பாபு , வனக்காப்பாளர் நாகராஜன், ஆகியோர் முன்னிலையிலும் தனிதனியே தாமாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார்கள். 1 ம் எதிரி பெருமாள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை வனவர் ராஜேந்திரன் பதிவு செய்து எதிரியிடம் கைரேகை பெற்று என்னிடமும் மற்ற சாட்சிகளிடம் கையெப்பம் பெற்றார். 2 ம் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை வனக்காப்பாளர் நாகராஜன் பதிவு செய்து இரண்டாம் எதிரியிடம் கையெழுத்து பெற்றார் அதில் வனவர் ராஜேந்திரன் , வேட்டை தடுப்பு காவலர் பாபு, மற்றும் நானும் சாட்சியாக இருந்து கையெழுத்து செய்தோம். பின்னர் எதிரிகளிடமிருந்து கைப்பற்றிய எறும்பு திண்ணியின் ஓட்டிற்கும் TN 39 AL2806 என்ற இருசக்கர வாகனத்திற்கும் H நமூனா தயார் செய்தேன். **தயார் செய்த H நமூனா அ.சா.ஆ.6 ஆகவும் மகசர் அ.சா.ஆ.7 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**. எறும்பு திண்ணியின் ஓடு, மற்றும் வெள்ளை நிற சாக்கு பை ஆகியவை அ.சா.பொ.1 ,2 ஆக அ.சா.1 மூலமாக ஏற்கனவே குறியீடு செய்யப்படுள்ளது. சம்பவ நடந்த இடத்தை Beat map ல் என்னால் குறியீடு செய்யப்பட்டது. **அந்த Beat map அ.சா.ஆ.8 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் எதிரிகள் மற்றும் கைப்பற்றிய பொருட்களுடன் அலுவலகம் வந்து அலுவலக பதிவேட்டில் பதிவு செய்து O.R எண் கொடுக்கப்பட்டு எதிரிகளையும் கைப்பற்றப்பட்ட பொருட்களையும் நீதிமன்றத்தில் ஒப்படைத்து எதிரிகளை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியும், கைப்பற்றிய பொருட்களுக்கும் சி.பி.எண் 55/2014 பெறப்பட்டது. மேற்படி வாகனத்தை 2ம் எதிரி சி.எம்.பி. எண் 7242/2013,ல் 14.02.2014 தேதியிட்ட நீதிமன்ற உத்தரவு படி இடைகால பொறுப்பில் பெற்றுச் சென்றுள்ளார், மேற்படி 2 ம் எதிரியின் இறப்பு சான்றிதழ் நீதிமன்றத்தி தாக்கல் செய்யப்பட்டு 25.04.2017 அன்று மேற்படி எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டுகள் அற்றுப்போய்விட்டது. இந்நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ள எதிரிகளிடமிருந்து தான் (1ம் எதிரி ) எறும்பு திண்ணி ஓடுகள் உடன் சாக்கு பை கைப்பற்றப்பட்டது.